1973 நவம்பர் 21]

பல்லவன் போக்குவரத்துக் கழகம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னை மாநகரின் சில பகுதிகளில் நேர்த்தடப் பணிகளை (Radial Services) கிளைத்தடப் பணிகளை (Feeder Services) சோதனை அடிப்படையில் செயல்படுத்தி வருவது உண்மையா ?

(இ) ஆமெனில், எந்தெந்த வழித்தடங்களில் சோதனை அடிப்படையில் அப்பணிகள் நடத்தப்பட்டன ?

(உ) அவற்றால் ஏற்பட்ட பலன் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ), (இ) & (உ) பல்லவன் போக்குவரத்துக் கழகம், சைதாப்பேட்டை பகுதியில் நேர்த்தட முறை (Radial Routes) கிளைத்தட முறை (Feeder Routes) ஆகியவற்றைச் சோதனைஅடிப்படையில் நடத்திவருகிறது. மொத்தத்தில் வெற்றிகரமானதொரு திட்டமாகும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தச் சோதனைக்குப் பிறகு சென்னையிலுள்ள மற்ற பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கும் அபிப்பிராயம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அது எப்போது முதல் விஸ்தரிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இத்தகைய வழித்தடங்களைச் சீர்படுத்துகிற முறையினை மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. படிப்படியாக அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

City Buses

* 28 *Q.*—Thiru R. SAKTHI MOHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government have any proposal to increase the number of City buses in Madurai City; and

(*b*) if so, the details thereof ?

நகரப் பேருந்துகள்

திரு. ஆர். சக்திமோகன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை நகரில் நகரப் பேருந்துகளின் (City Buses) எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு அரசு திட்டம் ஏதும் வைத்திருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) 17-1-72-ல் தனியாரிடமிருந்து தேசியமயமாக்கப்பட்ட பொழுது மதுரை நகரில் எடுத்துக் கொண்ட பேருந்துகள் 101. மதுரை நகரில் தற்பொழுது 139 பேருந்துகள் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினால் ஓட்டப்படுகின்றன. அரசின் தேசிய மயத் திட்டத்தின் கீழ் இந்த எண்ணிக்கை படிப்படியாக 200 ஆக உயரும். மேலும் நகரில் உள்ள வழித் தடங்களில் போக்குவரத்துத் தேவைகளுக்குத் தக்கபடி பரிசீலனை செய்து ஒவ்வொரு மாதமும் பேருந்துகள் அதிகரிக்கப்படுகின்றன.

Scales of pay to all the Temple Staff

* 29 Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to fix uniform scales of pay to all the temple staff under the control of the Hindu Religious and Charitable Endowments (A) Department in the State; and

(*b*) if so, the details thereof?

ஆலயப் பணியாளர்களின் சம்பள வீதங்கள்

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், இந்து சமய அறக்கட்டளைத் துறை (நிர்வாகம்) கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆலயப்பணியாளர்கள் அனைவருக்கும் ஒரே சீரான சம்பள வீதங்களை வரையறுப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?